புரட்சிப்
# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்
• திருவள்ளுர் ஆண்டு 2056 • ஜுன் 05, 2025 • புரட்சி 25 • முழக்கம் 21 • விலை ரூ.6.00

## மதுரையில் கழகம் கண்டன ஆர்ப்பாட்டம்
# மதக்கலவரத்தை தூண்டும் ஆதினத்தை கைது செய்




மதக்கலவரங்களை தூண்டும் விதமாக பேசி வரும் மதுரை ஆதினத்தை கண்டித்து 16-5-2025 அன்று காலை 10:30 அளவில் திராவிடர் விடுதலைக் கழகம் சார்பாக மதுரையில் கண்டன ஆர்பாட்டம் நடைபெற்றது.


இந்த கண்டன நிகழ்வில் பால் பிரபாகான் (கழக பரப்புரைச் செயலாளர்) கலந்து கொண்டு கண்டன உரை நிகழ்த்தினார். மாவட்டத் தலைவர் காமாட்சி பாண்டி (திவிக) தலைமையில் நிகழ்வு தொடங்கி, கனியமுதன்(விசிக), மீ.த பாண்டியன்(மதநல்லிணக்கக் கூட்டமைப்பு ஒருங்கிணைப்பாளர்), பசும்பொன் பாண்டியன் (அ.தி.ம.மு.க), பேரறிவாளன் (பொதுச் செயலாளர் - தமிழ்ப் புலிகள்), கபீர் நகர் கார்த்திக் (ஆதித்தமிழர் பேரவை துணை பொதுச் செயலாளர்), வரதராஜன் (பெரியார் நெறியாளர்), தமிழ்ப்பித்தன் (த.பெ.தி.க), ராமலிங்கம் (ம.க.இ.க மாநில ஒருங்கிணைப்பாளர்), அப்பாஸ் (மனிதநேய மக்கள் கட்சி), குமரன் (பு .இ.மு) ஆகியோர் கலந்து கொண்டு ஆதீனத்தைக் கண்டித்தும், அவரை கைது செய்யவும், தமிழ்நாடு அரசு நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி தோழமை இயக்கங்களுடன் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் வாசுகி, முருகேசன், வேங்கைமாறன் மற்றும் மேரி - (தமிழ்த் தேச மக்கள் முன்னணி), பரிதி - (தமிழ் தமிழர்இயக்கம்), சின்னப்ப தமிழர் (தமிழ் வழிக் கல்வி இயக்கம்), அமுதா மற்றும் ஆதரவாளர்கள் முன்னணிப் பொறுப்பாளர்கள் பலர் கலந்து கொண்டு சிறப்புடன் நிகழ்வு நடைபெற்றது. மாவட்ட காப்பாளர் தளபதி நன்றியுரை ஆற்றினார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கலவரத்தைத் தூண்டும் விதமாக பேசி வரும் மதுரை ஆதீனத்தின் மீது வன்முறை வெறுப்பு பேச்சுக்காக நீதிமன்றம் தானாக முன்வந்து வழக்குப் பதிவு செய்து அவரை கைது செய்ய கோரியும், ஒற்றுமை சீர்குலைக்கும் விதமாக அவதூறும் பரப்பும் அவர் மீது இந்து சமய அறநிலையத்துறை துறை ரீதியாக நடவடிக்கை எடுக்கக் கோரியும்,

மர்ம மனிதர்களால் நிரம்பி வழியும் ஆதீனத்தை சுற்றி உள்ள கலவரக் கும்பல் மீது நடவடிக்கை எடுக்க கோரியும் தமிழ்நாடு அரசுக்கு திராவிடர் விடுதலை கழகத்தின் சார்பாக வலியுறுத்தப்பட்டது.

# தமிழிலிருந்து பிறந்ததே திராவிட மொழிகள்! – பெரியார்



**நடிகர் கமல்ஹாசன் தமிழில் இருந்து பிறந்தது கன்னடம் என்று கூறியதற்கு கர்நாடக உயர்நீதிமன்றம் கண்டனம் தெரிவித்து உள்ளது. நடிகர் கமல்ஹாசன் மன்னிப்புக் கேட்க மறுத்துவிட்டார். பெரியார் கருத்து இதுவாகவே இருந்து இருக்கிறது. அவரது எழுத்தில் இருந்து சிலபகுதிகள்;**

மொழிவாரி மாகாணம் பிரிக்கப் படப்போகிறது. மொழி வாரி வித்துவான்கள் நியமிக்கப்பட்டு மொழி வாரி இலக்கணங்களும் செய்யப்பட்டு திராவிட மொழியைப் பாழாக்கத் திட்டம் தீட்டியாகி விட்டதே!.... பண்டிதர்களில் சிலர் இவை நான்கும் ஒன்றிலிருந்து வந்தவை; ஒரே தாய் வயிற்றில் பிறந்து வளர்ந்த நாலு அக்கா தங்கைகள் என்று கருதுகிறார்கள். இது பித்தலாட்டம் என்பதுதான் என் கருத்து. இத்திராவிடத் தாய்க்குப் பிறந்தது ஒரே மகள்தான். அது தமிழ்தான். அந்த ஒன்றைத்தான் நாம் நாலு பேரிட்டு அழைக்கிறோம்.

நாலு இடத்தில் பேசப்படுவதால் நான்கு பெயரில் வழங்குகிறதே ஒழிய நாலிடத்திலும் பேசப்படுவது தமிழ் ஒன்றுதான். நாலும் ஒன்றிலிருந்து உண்டானவை என்று எண்ணுவது தான் தவறு. ஒன்றுதான் நாலாக நமது அறியாமையால் கருதப்பட்டு வருகிறது. இதை நிரூபித்துக் காட்டவும் என்னால் முடியும்.

நாலு தனி இடங்களில் வசித்து வந்த மக்கள் போக்கு வரவுத் தொடர்பு இல்லாததால் அந்தந்த சீதோஷ்ண நிலைக்கேற்ப இயற்கையாகவே அவர்கள் பேசிய வார்த்தைகளில் சில சப்த மாறுபாடுகள் ஏற்பட்டுள்ளன. இதைச் சாதகமாக வைத்துக் கொண்டு நம்மை நாலு ஜாதியாகப் பிரித்து வைத்த ஆரியம் நம் மொழியையும் நான்காகப் பிரித்து வேண்டுமளவும் வடமொழியை அவற்றிற்குள் புகுத்தித் திராவிட மொழியை கெடுத்து விட்டது. அன்றைய பண்டிதர்கள் ஆரிய மதத்திற்கு அடிமைப்பட்டிருந்ததால் அதைத் தடுத்தார்கள் இல்லை. இன்னும் நமது பண்டிதர்களுக்கு அந்த ஆரிய மோகம் தீர்ந்த பாடில்லை.

ஆரிய மோகம் அற்ற ஒரு தெலுங்குப் பண்டிதர், ஒரு கன்னடியப் பண்டிதர், ஒரு மலையாளப் பண்டிதர், ஒரு தமிழ்ப் பண்டிதர் ஆகிய நால்வர் ஒன்றாக உட்கார்ந்து நாலு அகராதிகளை வைத்துக் கொண்டு அவற்றிலுள்ள வடமொழி அத்தனையும் நீக்கி விடுவார்களானால் எஞ்சியிருப்பவை அத்தனையும் தமிழ் வார்த்தைகளாகவே இருப்பதைக் காண்பார்கள். 100-க்கு 5 வார்த்தை கூடத் தமிழ் அல்லாத வார்த்தையாக இருக்காது. அதற்குள்ள சற்று நீட்டலையோ குறுக்கலையோ எடுத்து விட்டுப் பார்த்தால் அவையும் தமிழாகவே முடியும்...

இவை நான்கும் ஒரே உதிரத்தில் இருந்து உதித்தது அல்ல. அந்த உதிரமேதான் இவை நான்கும். என்னருந் தமிழே, நீயேதான் தெலுங்கு; நீயேதான் மலையாளம்; நீயேதான் கன்னடம் என்றுதான் நான் கூறுவேன். இவை வெவ்வேறு மொழிகளாயிருந்தால் இவைகளுக்கு முதல் நூல்கள் எங்கே? தமிழுக்குத்தான் முதல் நூல்கள் எத்தனையுள்ளன? அத்தனையும் ஆடிப்பெருக்கில் ஒழித்த ஆரியக் கூட்டமும் அவர்களின் அடிவருடிகளும்தானே இன்று தமிழ், தமிழ் என்று கூப்பாடு போடுகிறார்கள்?......தமிழ் என்றால் இனிமை என்பது தவிர வேறேதாவது உனக்குத் தெரியுமா? தமிழர் என்பது மொழிப் பெயர். திராவிடர் என்பது இனப்பெயர்.

**-விடுதலை 08.12.1947.**

----------------------

ஒரு பொருளுக்குத் தமிழில் உள்ள பல சொற்களே ஒவ்வொரு நாட்டிலும், தனித்தனியாக வழங்கி வேறு மொழியாக நிற்கிறது. உதாரணமாக,

‘வீடு’ என்ற சொல்லுக்குத் தமிழில் மனை, இல், அகம், அறை, வளவு என்றிருக்கிறது. தமிழர் ’வீடு’ என்பார்கள். தெலுங்கர் ‘இல்’ என்பார்கள். கன்னடியர் ’மனை’ என்பார்கள். மலையாளிகள் அறை, பொறை என்பார்கள். ஆரியர்கள் அகம் என்பார்கள். இப்படியாக ஒரு பொருளுக்கு உள்ள பல சொற்களை 2 இடங்களில் பல மாதிரியாகப் பேசுகிறார்கள். இப்படியாக ஒரே சொல்லுக்குப் பல பொருள் உள்ளவைகளைப் பலர் பல இடங்களில் பல மாறுபாட்டோடு உபயோகிக்கிறார்கள் என்ப தைத் தவிர, கன்னடம், தெலுங்கு, மலையாளம், தமிழ் என்ற மொழிகள் வேறு மொழிகளும் அல்ல - கிளை மொழிகளும் அல்ல.

**-(குடிஅரசு 02-02-1946 பக்-3), 09-02-1946 பக்-1).**

# கழகத் தலைமை அலுவலகத்தில் இட ஒதுக்கீடு அறிமுகவகுப்பு!

*01.06.2025* தமிழ்நாடு மாணவர் கழகம் முன்னெடுத்த புதிய தோழர்களுக்கான "இட ஒதுக்கீடு - அ முதல் ஃ" என்ற தலைப்பில் அறிமுக வகுப்பு நடைபெற்றது. கூட்டத்திற்கு குடியரசு தலைமை தாங்கினார், தோழி அனைவரையும் வரவேற்றார், தமிழ்நாடு மாணவர் கழக சென்னை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பேரன்பு நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார்.

மாணவர் கழக மாவட்ட அமைப்பாளர் வழக்கறிஞர் இளவரசன் முன்னிலை வகித்தார். மாணவர்களுக்கும் தோழர்களுக்கும் திராவிடர் விடுதலைக் கழகத்தின் தலைமைக்குழு உறுப்பினர் தோழர் அன்பு தனசேகர் இட ஒதுக்கீடு பற்றி சிறப்பாக அறிமுக வகுப்பெடுத்தார். வகுப்பிலிருந்து கேட்கப்பட்ட வினாடி வினா போட்டியில் வெற்றிபெற்ற தோழர் லாவண்யா அவர்களுக்கு தோழர் அன்பு தனசேகர் பரிசுத்தொகை ரூ.1000/- வழங்கினார். நிகழ்வில் திராவிடர் விடுதலைக் கழகத் தலைமை நிலையச் செயலாளர் தபசி. குமரன் உட்பட 40-க்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்துகொண்டனர். தோழர்களுக்கு மதிய உணவை தி.வி.க மாவட்டச் செயலாளர் உமாபதி வழங்கினார். நிறைவாக தமிழ்நாடு மாணவர் கழகத் தோழர் யுவலதா நன்றியுரை ஆற்றினார்.



# காணாமல்போன கடவுள் சக்தி

கடவுள் இல்லை; எங்கே கடவுள் சக்தி? என்று நாத்திகர்கள் பேரணி நடத்துகிறார்கள் என்பதற்காக எந்த கடவுளும் கொந்தளிக்கவில்லை.

"இதோ அவதாரம் எடுத்து சம்ஹாரம் செய்கிறேன்,பார்!" என்று ஆயுதங்களையும் தூக்கிக் கொண்டு ஓடி வரவில்லை. சரி, போகட்டும்;கொளத்தூர் கழக மகளிர் கனவில் வந்தாவது மிரட்டி இருக்கலாம் அதற்கும் தயாராக இல்லை உண்மையில் கொந்தளித்தது யார் தெரியுமா? கொளத்தூர் காவல்துறை தான்.

"அய்யோ கடவுள் எதிர்ப்புக்கு நாங்கள் அனுமதி தர முடியுமா? அது பாவமல்லவா?" என்பதற்காக காவல்துறை கொந்தளிக்கவில்லை. "சங்கிகள் கூச்சல்களை சந்திக்க வேண்டியிருக்குமே என்பதுதான் அவர்களின் பயம்.

"என்னை எதிர்ப்பவருக்கு பேரணி நடத்த அனுமதிக்காதே! அழித்துவிடுவேன்" என்று ஏதேனும் ஒரு காவல் அதிகாரி கனவில் வந்தாவது கடவுள் மிரட்டி இருக்கலாம் அதுவும் இல்லை" அப்படி எதுவும் நடக்காமலேயே கடவுள் பக்தியோ, பக்தர்களின் மனம் புண்படும் செயல்களையோ நிகழ்த்த மாட்டோம் என்று எழுதிக் கேட்டது காவல்துறை.

"எதற்கு நாங்கள் எழுதித் தர வேண்டும்; கடவுளைப் புண்படுத்துகிறோம் என்றால் அந்த கடவுளுக்கு சக்தி இருந்தால் எங்களை கண்டிக்கட்டுமே; ஏதாவது ஒரு அவதாரம் எடுத்து வந்து சம்ஹாரம் செய்யட்டுமே! குறைந்தது ஒரு பன்றி அவதாரமாவது எடுத்து எங்கள் பேரணியை நிறுத்தலாமே?" என்று கருப்புச் சட்டை தோழர்கள் எதிர்க் கேள்வி கேட்டால் என்ன பதில் வரும் தெரியுமா?

"என்னங்க இது விதண்டாவாதம்! இதெல்லாம் நம்பும்படியா இருக்கு. காக்கா, நரி கதை எல்லாம் சொல்லி எங்க காதுல பூசுத்தாதீங்க கடவுளாவது, கனவில் வருவதாவது பேரணிக்கு அனுமதியில்லை" என்பதுதான் காவல்துறை அதிகாரியின் பதிலாக இருக்கும்.

ஆனால் பெரும்பாலான காவல்துறையினர் நெற்றியில் விபூதி, குங்குமத்தை குழைத்து பூசி இருப்பார்கள். அந்த காவல் நிலையங்களில் இவர்கள் நம்ப மறுக்கும் கடவுள் படங்களுக்கு விளக்கேற்றி பூ போட்டு பூசை செய்வார்கள். "இந்த பிரச்சினை எல்லாம் எங்கள் சரக எல்லைக்குள் வராது. நீங்க நீதிமன்றத்திற்கு போங்கள்" என்று ஆலோசனை வழங்கி விடுவார்கள்.

நீதிமன்றம் என்ன செய்யும்? வழக்கை விசாரணைக்கு ஏற்கும். "கடவுள் எதிர்ப்பை அனுமதித்தால் அது பாவமாயிற்றே? எனது பதவி உயர்வு என்னாவது? எனது குடும்பம் என்னாவது? என்று எந்த நீதிபதியும் கூறமாட்டார். வழக்குகளைக் கடவுளோடு முடிச்சுப் போட்டால் தீர்ப்பு வழங்க நீதிபதிகளே தேவையில்லை. நீதிமன்றங்களையும், காவல் துறையையும் இழுத்து மூடி விடலாம். கடவுள்களின் சக்தியை தங்கள் வளாகத்திற்குள் நுழைய விடாமல் ஓரம் கட்டி வைத்திருக்கின்றன. இப்படி அரசுத் துறைகளும் சட்டங்களும் கடவுளைப் புண்படுத்துகிறதே என்று எந்த சங்கிகளும், முன்னணிகளும் தொடைத்தட்டிக் கிளம்புவது இல்லை.

சென்னை இந்து அறநிலையத் துறை தலைமையகத்தில் கட்டுப்பாடு அறை ஒன்றை தமிழ்நாடு முதல்வர் மு.க ஸ்டாலின் 2022-ல் திறந்து வைத்துள்ளார். தமிழ்நாடு முழுவதும் உள்ள 48 முக்கிய கோவில்களில் கடவுள் பாதுகாப்பு, கோயில் நகைகள் பாதுகாப்பு பக்தர்களிடம் நடக்கும் திருட்டு மோசடி போன்றவற்றை கண்காணிக்க 3057 கண்காணிப்பு கேமராக்களும், 42 தொலைக்காட்சிகளும் நவீன தொழில்நுட்பத்துடன் பொருத்தப்பட்டுள்ளன. குற்றவாளிகளை கடவுள் கண்டுபிடிக்க மாட்டார், நாங்கள் இந்த தொழில்நுட்பத்துடன் கண்டுபிடித்து விடுவோம் என்ற நோக்கத்தோடு தான் இவை அமைக்கப்பட்டிருக்கின்றன.

ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரிகள் இந்த 48 கோயில்களிலும் பாதுகாப்புக்காக நியமிக்கப்பட்டுள்ளதாக, அறநிலையத்துறை அமைச்சர் சேகர் பாபு மிகுந்த பக்தி உணர்வுடன் பரவசப்பட்டுள்ளார்

மூன்றரை கோடி ரூபாய் மதிப்புள்ள தங்கம், 13 உண்டியல் திருட்டு, 105 காணமல் போன குழந்தைகள், 450 அலைபேசி திருட்டுகளைக் கடந்த 2 ஆண்டுகளில் எங்கள் கண்ட்ரோல் ரூம் கண்டுபிடித்துள்ளது என்று பெருமை கொண்டாடுகிறார் சேகர் பாபு. கடவுள் சக்தியை கண்ட்ரோல் ரூம் கையில் எடுத்து கொண்டுவிட்டது.

வெளியே கடவுள்பேச்சு; செயலில் கடவுள் மறுப்பு

இதைத் தானப்பா.....நாங்களும் கூறுகிறோம் என்று கம்பீரமாக கேட்கிறது கருஞ்சட்டைப் படை. **-கோடங்குடி மாரிமுத்து**.

# பாமகவில் நடக்கும் "குடும்ப நீதி" சண்டை

பிறவியின் அடிப்படையில் இலவசமாகக் கிடைத்தது ஜாதி. இந்த ஜாதியால் பயன் அடைந்தவர்கள் அதைக் கொண்டாடினார்கள். பாதிக்கப்பட்டவர்கள் கொடுமைகளை அனுபவித்தார்கள்.

ஜாதி சமூகத்தை வளர்க்கவில்லை; மாறாக சமூகத்தைப் பிளவுபடுத்தியது; சமூக ஒற்றுமையையும் அது கட்டிக் காக்கவில்லை.

இன்றைக்கு அரசியலில், அதிகாரத்திலும், சமூக உறவுகளைப் பகிர்ந்து கொள்வதிலும், முரண்பாடுகளும் மோதல்களும் வெடித்துக் கொண்டு இருக்கின்றன.

"பாட்டாளி மக்கள் கட்சியில் இன்று நடக்கும் அதிகார சண்டை என்பது ஜாதி அரசியலில் மோசமான தோல்வி!" சமூக நீதிக்காக உருவாக்கப்பட்ட ஒரு அரசியல் கட்சி ஒரு காலத்தில் முற்போக்கு பாதையில் பயணித்தது உண்மை; பிறகு 35 வயதில் தனது மகனை இராமதாஸ்அமைச்சராக்கிய பிறகு அது திசை மாறியது.

மருத்துவர் ராமதாஸ் அது நான் செய்த பெரும் தவறு என்று இப்போது ஒப்புக் கொண்டிருக்கிறார். சமூக நீதி அரசியலை சமூகத்திற்காகப் பயன்படுத்தாமல் பதவிகளுக்காகப் பயன்படுத்தும் நோக்கத்தோடு கூட்டணிகளை மாறி மாறி ஏற்படுத்திக் கொண்டு சுயநலப் பாதையில் அதிகாரத்திற்காக பயணித்தவர்கள், அந்த முரண்பாடுகளை இப்போது சந்தித்துக் கொண்டு இருக்கிறார்கள்.

ஜாதி என்னும் நோய்க்கு மருந்து தான் சமூக நீதி. ஆனால் அந்த நோயை உணவாக மாற்றிக்கொண்டு அரசியல் நடத்தியதன் விளைவை இப்போது பாட்டாளி மக்கள் கட்சியில் பார்த்துக்கொண்டு இருக்கிறோம். அரசியலிலும் ஜாதி ஓர்மையை உருவாக்கவில்லை, சமூகத்திலும் அது ஒடுக்கு முறையைத்தான் திணிக்கிறது ஆக ஜாதி என்பது அழித்து ஒழிக்கப்பட வேண்டிய ஒரு நோய் என்பதையே இந்த நிகழ்வுகள் நிரூபித்துக் கொண்டிருக்கின்றன.

-விடுதலை இராசேந்திரன்
31.05.2025

# நாமக்கல் மாவட்ட கழகம் "முழக்கத்துக்கு"நன்கொடை

நாமக்கல் மாவட்டம் திராவிடர் விடுதலைக் கழகத்தின் மாவட்ட அமைப்பாளர் அ முத்துப்பாண்டி, மாவட்டச் செயலாளர் சரவணன், மாவட்டக் காப்பாளர் கேப்டன் அண்ணாதுரை, குமாரபாளையம் நகரத் தலைவர் எம் டி தண்டபாணி ஆகியோர் முயற்சியில் புரட்சி பெரியார் முழக்கம் வளர்ச்சி நிதியாக ரூ.10,000 வழங்கப்பட்டது. நன்றியுடன் பெற்றுக் கொண்டோம்.

# திருச்செங்கோடு தோழர்கள் விடுதலை

எச்.ராஜா உருவ பொம்மை எரிப்பு வழக்கில் இருந்து கழகத் தோழர்கள் விடுதலை : பெரியார் சிலையை உடைப்பேன் என்று சமூக வலைத்தளத்தில் பதிவிட்ட பாஜக எச்.ராஜாவைக் கண்டித்து 2018 ஆம் ஆண்டு மார்ச் 7 ஆம் தேதி நாமக்கல் மாவட்டக் கழகம் சார்பில் திருச்செங்கோடு பெரியார் சிலை அருகில் எச்.ராஜா உருவ பொம்மை எரிப்புப் போராட்டம் நடைபெற்றது.

பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூறு இல்லாமல் நடைபெற்ற போராட்டத்தைக் கூட தாங்கிக் கொள்ள முடியாத அதிமுக காவல்துறை, போராடிய கழகத் தோழர்கள் 12 பேர் மீது வழக்குப் பதிவு செய்தது. சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திருமூர்த்தி திறம்பட வாதாடி வழக்கை ரத்து செய்தார்.

வழக்கில் விடுதலை பெற்றவர்கள் : மு.சாமிநாதன், வைரவேல், தண்டபாணி, சதீசுகுமார், பூபதி, மணி, பிரகாஷ், சுப்பு என்கிற ராஜசேகர், கோபி, தியாகு, மனோஜ், கவுதம்.

# வினாடி வினா

● தமிழ்நாடு இரயில்வே திட்டங்களுக்கு ஒன்றிய ஆட்சி அனுப்பிய நிதியை தெற்கு ரயில்வே திருப்பி அனுப்பி விட்டது. **-செய்தி**

ஆமாம்.தெற்கு ரயில்வே வடக்கு இரயில்வேவாக மாறிவிட்டது.

● "ஆச்சாரியா பஞ்சகச்சம்" வேட்டியை வெளியிட்டு ராமராஜ்ய மரபுகளுக்கு பெருமை சேர்த்துள்ளோம். **-ராம்ராஜ் காட்டன்**

ராம்ராஜ் காட்டன் ஜட்டிகளைத் தயாரித்து ராமனுக்கு பெருமை சேர்த்ததையும் சேர்த்து சொல்லுங்க.

● கீழடி அகழ்வாய்வு அறிக்கையை ஆய்வாளர் அமர்நாத்துக்கு திருத்தி எழுத திருப்பி அனுப்பியுள்ளது. **-ஒன்றிய ஆட்சி**

ஆர்எஸ்எஸ் ஆபிஸ்க்கு மெயில் போடுங்க. அமர்நாத் வேலையை அவங்க பார்த்துப்பாங்க.

● எங்க கூடத்தான் பாமக இருக்கு **-பாஜக தலைவர் நயினார்**

சரி; பாமக யாரு கூட இருக்கு நயினார் ஜீ.

● குற்றவாளி ஞானசேகரன் வழக்கில் அமைச்சர் மா.சுப்பிரமணியத்தை விசாரிக்க வேண்டும். **-அண்ணாமலை**

இது நீதிமன்ற விசாரணை ஜீ, அமலாக்கத்துறை விசாரணை அல்ல.

## மேட்டூர் நாத்திக விழா சிந்தனை:

# "நான் சொன்னால் உனக்கு ஏன் கோபம் வரவேண்டும்?"

***பெரியார் முதன்முதலாக விடயபுரம் பயிற்சி வகுப்பில் உருவாக்கிய கடவுள் மறுப்பு வாசகத்திற்க்கு விளக்கம் அளித்து பெரியார் எழுதிய கருத்தாழமிக்க கட்டுரை:***

கடவுளை உண்டாக்கியவன் முட்டாள்; பரப்பினவன் அயோக்கியன்; வணங்குகிறவன் காட்டுமிராண்டி என்று கூறிவருவது கண்டு, பார்ப்பனர் நெருப்பின் மீது நிற்பதுபோல் துள்ளுகிறார்கள்; துள்ளிக் குதிக்கிறார்கள். அப்பாவிகளையும், கூலிகளையும் பிடித்து நம்மீது ஏவிவிடுகிறார்கள்.

பெரும் பெரும் போராட்டங்கள் நடத்தப் போவதாகப் பூச்சாண்டி காட்டுகிறார்கள். இதை நான் வரவேற்கிறேன்; எதிர்பார்க்கின்றேன். காரணம், போராட்டம் துவக்கினால், எனது மேற்கண்ட பிரசார வேலைக்கு உதவியாகும் என்பதோடு, மேலும் இத்தொண்டு செய்ய உற்சாகமூட்டி ஊக்கமளிக்கும் என்று கருதுவதுதான்.

கடவுளை உண்டாக்கியவன் முட்டாள் என்பதற்காகக் கோபித்துக்கொள்ளும் சிகாமணிகளே! நான், கடவுளை உண்டாக்கியவன் முட்டாள் என்றால், எதற்காக நீங்கள் கோபித்துக் கொள்ளவேண்டும்? "உண்டாக்கியவன் முட்டாள்" என்றால், உண்டாக்கியவன் யார்? அச்சொல் யாரைக் குறிக்கிறது? கோபிக்கின்றவனே! நீ, கடவுள் உண்டாக்கப்பட்டது என்பதை ஒப்புக்கொள்கிறாயா? கடவுளை உண்டாக்கியவன் ஒருவன் இருக்கிறான் என்பதை ஒப்புக்கொள்கிறாயா? உனது முட்டாள் தனத்தைக் காட்டத்தான் கோபிக்கிறாய்; ஆத்திரப்படுகிறாய். நிற்க, உன் ஆத்திரத்திற்குக் காரணம், ஆதாரம் என்ன?

நான் சொல்வதில் உனக்கு ஆத்திரம், கோபம் வருவதாயிருந்தால் எதற்காக வரும்? நான் சொல்வதைக் கடவுள் ஒருவனால் உண் டாக்கப்பட்டது என்று நீ கருதினால்தானே, உண்டாக்கின வனை நான் முட்டாள் என்கின்றேன் என்று நீ கோபிக்க வேண்டும்?

மற்றும், கடவுள் ஒருவனால் உண்டாக்கப்பட்டது என்று கருதுகிறவனுக்குத்தானே கோபம், ஆத்திரம் வரவேண்டும்? நீ கோபிப்பதால் கடவுள் ஒருவனால் உண்டாக்கப்பட்டது என்பதை நீ ஒப்புக்கொள்கிறாய் என்றுதானே அர்த்தம்?

அது மாத்திரமல்லாமல், நீ கோபிப்பதால் கடவுளையும் அவமதிக்கிறாய் என்றுதானே கருத்தாகிறது?

முண்டமே! நீ நினைக்கும் கடவுள் ஒருவனால் உண்டாக்கப்பட்டது என்கிறாயா? அல்லது, அது ஒருவனால் கண்டுபிடிக்கப் பட்டது என்கிறாயா? அல்லது, கடவுள் யாராலும் உண்டாக்கப் படாமல், யாராலும் கண்டுபிடிக்கப்படாமல் தானாக, இயற்கை யாக, கடவுள் இஷ்டப்படி கடவுளே தோன்றிற்று என்கிறாயா? நான் சொல்வதில் உனக்கு ஆத்திரம், கோபம் வருவதாயிருந்தால் எதற்காக வரும்? நான் சொல்வதைக் கடவுள் ஒருவனால் உண் டாக்கப்பட்டது என்று நீ கருதினால்தானே, உண்டாக்கின வனை நான் முட்டாள் என்கின்றேன் என்று நீ கோபிக்க வேண்டும்?

மற்றும், கடவுள் ஒருவனால் உண்டாக்கப்பட்டது என்று கருதுகிறவனுக்குத்தானே கோபம், ஆத்திரம் வரவேண்டும்? நீ கோபிப்பதால் கடவுள் ஒருவனால் உண்டாக்கப்பட்டது என்பதை நீ ஒப்புக்கொள்கிறாய் என்றுதானே அர்த்தம்?

அது மாத்திரமல்லாமல், நீ கோபிப்பதால் கடவுளையும் அவமதிக்கிறாய் என்றுதானே கருத்தாகிறது?

இப்போது நீ நினைத்துப் பார்! கடவுள் உண்டாக்கப்பட்டதா? (கிரியேஷனா) (creation) அல்லது, கடவுள் கண்டுபிடிக் கப்பட்டதா? இன்வென்ஷனா (Invention) அல்லது, கடவுள் இயற்கையாய்த் தோன்றினதா? நேச்சரா (Nature) இதை முதலில் முடிவு செய்துகொள்.

நான் சொல்வதன் கருத்து கடவுள் கண்டுபிடிக்கப்பட்டதுமல்ல, தானாகத் தோன்றியிருப்பதுமல்ல, முட்டாளால் உண்டாக்கப் பட்டது என்பதாகும். அதை அதாவது, கடவுளை ஒரு மனிதன் உண்டாக்கினான் என்பதாக நீ நினைத்தாலோ அல்லது, அதை நீ ஒப்புக்கொண்டாலோதானே கடவுளை உண்டாக்கினவன் முட்டாள் என்றால், நீ கோபித்துக்கொள்ள வேண்டும்?

நீ இருப்பதாகக் கருதிக்கொண்டிருக்கும் 'கடவுள்' ஒருவராலும் உண்டாக்கப்பட்டதல்ல. "தானாக, சுயம்புவாகத் தோன்றி யிருக்கிறது" என்பதுதான் இன்று கடவுள் நம்பிக்கைக்காரர்களின் கருத்தாக இருக்கிறது.

ஆகையால், நான் கடவுளை உண்டாக்கியவனை முட்டாள் என்பதோடு, அதற்காகக் கோபிப்பவனை, ஆத்திரப்படுபவனை இரட்டை முட்டாள் என்று சொல்லவேண்டியவனாக இருக் கின்றேன்.

இப்படி நான் சொல்வதால், கடவுளால் எவன் பெரிய ஜாதி யாய் இருக்க ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறானோ அவனுக்கும், கடவுள் பேரால் பொறுக்கித் தின்னவேண்டுமென்று கருதிக் கொண்டிருக்கிறவனுக்கும், கடவுளால் தனது அயோக்கியத் தனங்களை மறைத்துக்கொள்ள வேண்டியவனுக்கும்தான் கோபம் வர வேண்டும். அதை நான் சமாளித்துக்கொள்ளுகிறேன்.

"கடவுளைப் பரப்புகிறவன் அயோக்கியன்" என்பதற்கு விளக்க மாக இவ்விளக்கம் எழுதப்படுகிறது.

கடவுளைப் பரப்புகிறவன் எவனுமே "கடவுள் தத்துவத்திற்கு" ஏற்பக் கடவுளைக் கற்பித்துக்கொண்டு பரப்புகிறவன், அல்லது பிரசாரம் செய்பவன், அல்லது கற்பித்துக்கொள்பவன். அல்லது கடவுளுக்காகவென்று கதைகள், புராணங்கள், இதிகாசங்கள், இலக்கியங்கள் எழுதினவன்கள், மற்றும் அதற்கு ஆகக் கோவில் கள் கட்டி, அவற்றுள் உருவங்களை வைத்தவன்கள், கடவுளுக் காசுவென்று பூசைகள், உற்சவங்கள், பண்டிகைகள் முதலியவை களை நடத்துகிறவன்கள், செய்கிறவன்கள் யாவருமே நாணயத் தையோ, யோக்கியதையையோ, ஒழுக்கத்தையோ ஆதாரமாக வைத்துக் கடவுளைப் பரப்புவதில்லை, நடத்துவதில்லை.

"கடவுளுக்கு உருவமில்லை; குணமில்லை" என்று ஆரம்பித்துக் "கடவுள் சர்வ வல்லமையுடையவர், சர்வத்தையும் அறியக்கூடிய சக்தி (சர்வஞ்ஞத்துவம்) கொண்டவர்," "கருணையே வடிவானவர்", "அன்பு மயமானவர்," "அவரின்றி அணுவும் அசையாது" என்பன போன்ற கடவுளின் எல்லாக் குணங்களையும், சக்திகளையும், தன்மைகளையும் அடுக்கடுக்காகக் கடவுளுக்குக் கற்பித்து மக்களை நம்பச் செய்துவிட்டு, இந்தக் குணங்களுக்கும் தன்மைகளுக்கும் மாறான குணங்களை, தன்மைகளை அதற்கு ஏற்றி, அதற்காகக் கோவில்கள் கட்டியும், உருவங்கள் உண்டாக்கிவைத்தும், நடவடிக்கைகளை ஏற்றியும், அவைகளை ஆதாரமாய்க்கொண்டு பூசை, உற்சவம், பண்டிகை முதலியவைகளைக் கொண்டாடச் செய்தல் மூலம் கடவுளைப் பரப்புவதென்றால், இக்காரிய முயற்சியில் ஈடுபட்ட மக்கள் அயோக்கியர்களா, அல்லவா? என்று சிந்தித்துப்பார்க்கும்படி கேட்கிறேன் .

இக்கூட்டத்தார் மக்களை ஏய்க்கவல்லாமல், வேறு எக்காரியத் திற்காக இக்காரியங்களில் ஈடுபடுகிறார்கள், ஈடுபட வேண்டியவர் களானார்கள் என்று சொல்ல முடியுமா?

இவர்கள் தங்கள் சுயநலத்திற்காக, தங்கள் பெருமைக்காக. தங்கள் வாழ்க்கை நலத்திற்காக, தங்கள் பிழைப்பிற்காக இக் காரியங்களைச் செய்யும் அயோக்கியர்களாக, முட்டாள்களாக இருந்துவருகிறார்கள் என்பதல்லாமல் வேறு கருத்து, காரணம் என்ன சொல்ல முடியும்?

இன்று இந்தப்படியான அயோக்கியர்களால் பரப்பப்பட்டிருக் கும் எந்தக் கடவுளை எடுத்துக்கொண்டாலும் அதற்கு வீடு, உணவு, பெண்டாட்டி, வைப்பாட்டி, குழந்தைக் குட்டிகள், நகைகள், சொத்துக்கள், கல்யாணம், உற்சவம், ஊர்வலம் முதலியவை செய்து, கூட்டத்தைக் கூட்டி, ஆயிரம், பல ஆயிரம், இலட்சம், பல இலட்சம் ரூபாய்கள் செலவு ஏற்படும்படியும் அதுபோலவே மக்களுக்கும் நாள் கணக்கில் மெனக்கேடு ஏற்படும்படியும் செய்வதோடு, கோடிக்கணக்கான மக்களை இழிசாதி மக்கள்களாகவும் இருக்கும்படி செய்கின்றனர்.

(தொடரும்...)

# விடயபுரம் பயிற்சி முகாம் வரலாறு!

'கடவுள் வணக்கம்' கூறுவதைப் போல இனி நாம் எல்லா நிகழ்ச்சிகளும் கடவுள் மறுப்பு வாசகத்தைச் சொல்லித்தான் தொடங்க வேண்டுமென்று அறிக்கை விடுத்தார் பெரியார். அன்றுமுதல் இன்றுவரை திராவிடர் கழக நிகழ்ச்சிகளில் கடவுள் மறுப்பு வாசகம் சொல்லப்படுவது வழக்கமான ஒன்று. அத்தகைய வரலாற்றுச்சிறப்பு மிக்க வாசகம் முதன்முதலில் சொல்லப்பட்ட இடம் விடையபுரம்."

2018-ஆம் ஆண்டு திரிபுராவில் பாரதிய ஜனதா கட்சி ஆட்சிக்கு வந்தவுடன் அங்கிருந்த லெனின் சிலை உடைக்கப்பட்டது. அதைப்போல தமிழ்நாட்டிலும் பெரியார் சிலை ஒருநாள் உடைக்கப்படும் என்று பதிவிட்டார் ஒருவர். எதிர்ப்புகள், வழக்குகளுக்குப் பிறகு தனது அட்மின் மீது பழியைத் தூக்கிப்போட்டார். அதுபோல, பெரியார் சிலைக்கு காவிச்சாயம் பூசுவார்கள், செருப்பு மாலை அணிவிப்பார்கள். நீதிமன்றக் கூண்டில் நிறுத்தப்பட்டால், மனநலம் பாதிக்கப்பட்டவர் என்றுசொல்லி பிணை கேட்பார்கள். மறைந்த அரை நூற்றாண்டுக்குப் பிறகும் எதிரிகளை இப்படி பெரியார் அச்சுறுத்துகிறார் என்றால், அவருடைய சித்தாந்தம் ஒரு காரணம். மற்றொன்று, அவரது சிலைக்குக் கீழே பீடத்தில் தவறாமல் எழுதப்பட்டிருக்கும் கடவுள் மறுப்பு வாசகம்.

அந்த கடவுள் மறுப்பு வாசகத்தை அகற்ற வேண்டுமென்று நீதிமன்றம் வரை சென்று போராடிப் பார்த்தார்கள். "யாருக்குச் சிலை வைக்கப்படுகிறதோ அவரின் கருத்துகள் சிலை பீடத்தில் பொறிக்கப்படுவது சரியானதே" என்று கூறி வழக்கை தள்ளுபடி செய்தது சென்னை உயர்நீதிமன்றம். அப்படி கடவுள் மறுப்பு வாசகத்தை பெரியார் முதன்முதலில் கூறிய இடம் திருவாரூர் மாவட்டத்தில் உள்ள விடையபுரம் கிராமத்தில்தான்.

1967-ஆம் ஆண்டு திருவாரூர் பகுதியில் ஒரு பயிற்சிப்பள்ளி நடத்த விரும்பிய பெரியார், தனது அணுக்கத் தொண்டரான வி.எஸ். பி.யாகூப்பிடம் கூறினார். காவாலக்குடியைச் சேர்ந்த ச.மாரிமுத்து, ப.நடேசன், வி.எம்.ஆர்.பதி ஆகியோரிடம் வி.எஸ்.பி.யாகூப் ஆலோசித்ததில், அவர்கள் கூறிய இடம் விடையபுரம் பண்ணைத்தோட்டம். இதுதொடர்பாக, வாசுதேவ நாயுடுவிடம் அவர்கள் பேசினர். தனது தந்தையான அப்புசாமி நாயுடு பண்ணையாரிடம் வாசுதேவ நாயுடு இதனைத் தெரிவிக்க, மகிழ்ச்சியோடு ஏற்பாடுகளைச் செய்தார். விடையபுரம் பண்ணை அப்புசாமி நாயுடுவுக்கும் பண்ணையாட்களுக்கும் ஏற்பட்டிருந்த தகராறுகளை பெரியார் தலையிட்டுத் தீர்த்துவைத்தார். அதற்கு விசுவாசமாக இந்த பயிற்சிப் பள்ளியைப் பயன்படுத்திக்கொண்டார் அப்புசாமி நாயுடு. 24.05.1967 அன்று அங்கே பயிற்சிப்பள்ளி தொடங்கியவுடன், பெரியார் தனது கைப்பட கடவுள் மறுப்பு வாசகம் ஒன்றை எழுதித்தந்தார்.

'கடவுள் இல்லை
கடவுள் இல்லை
கடவுள் இல்லவே இல்லை
கடவுளைப் உண்டாக்கியவன் முட்டாள்
கடவுளைப் பரப்பியவன் அயோக்கியன்
கடவுளை வணங்குகிறவன் காட்டுமிராண்டி
கடவுள் இல்லை
கடவுள் இல்லை
கடவுள் இல்லவே இல்லை'

என்று அவர் எழுதியதை பெரியாரின் உதவியாளர் மகாலிங்கம் வாசிக்க, மாணவர்கள் எல்லோரும் திரும்பக் கூறினர். 07.06.1967 'விடுதலை' இதழில் இதை பதிவுசெய்து, 'கடவுள் வணக்கம்' கூறுவதைப் போல இனி நாம் எல்லா நிகழ்ச்சிகளும் கடவுள் மறுப்பு வாசகத்தைச் சொல்லித்தான் தொடங்க வேண்டுமென்று அறிக்கை விடுத்தார் பெரியார். அன்றுமுதல் இன்றுவரை திராவிடர் கழக நிகழ்ச்சிகளில் கடவுள் மறுப்பு வாசகம் சொல்லப்படுவது வழக்கமான ஒன்று. அத்தகைய வரலாற்றுச்சிறப்பு மிக்க வாசகம் முதன்முதலில் சொல்லப்பட்ட இடம் விடையபுரம். இன்றும் அதற்கான கல்வெட்டு அடையாளங்கள் விடையபுரத்தில் உள்ளன.

காலத்தால் அழியாத இந்த கல்வெட்டு அடையாளம் மட்டுமல்ல, கருப்புச் சட்டைகளும் விடையபுரம் சுற்றியுள்ள பல கிராமங்களில் திராவிடர் கழகத்தின் வீரியமிக்க வரலாற்றுக்குச் சான்றாக இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

***–ர.பிரகாசு முரசொலியில் எழுதியது 30.05.2025.***

date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/25-27 licenced to post wpp no.tn/PMG(CCR)/WPP-462/25-27
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# புதுவையில் பெரியார் கைத்தடி பேரணி





புதுவையில் 10-5-25 அன்று பாசிச பாஜகவை வீழ்த்துவோம்! சமூகநீதியைக் காப்போம்! உழைப்பாளர் நாள், அம்பேத்கர் பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம் மற்றும் பெரியார் கைத்தடி பேரணியும்- பெரியார் சிந்தனையாளர் இயக்கம் சார்பாக நடைபெற்றது.

அரியாங்குப்பத்தில் கலைஞர், சிங்காரவேலர் சிலைகளுக்கு மாலை அணிவித்து, பெரியார் கைத்தடி பேரணியை பா.செ.சக்திவேல் (தலைமை பொதுக்குழு உறுப்பினர் திமுக புதுச்சேரி), மகேசு காஞ்சி மக்கள் மன்றம் இருவரும் கொடியசைத்து துவக்கி வைத்தனர். இந்த பேரணியில் வழிநெடுக கொள்கை முழக்கங்கள் எழுப்பப்பட்டன. பெரியார் சிலைக்கு கழக மயிலாடுதுறை மகேஷ் மாலை அணிவித்தார். அரியாங்குப்பம் பகுதியில் தொடங்கி சுமார் 3 கிலோமீட்டருக்கு பேரணியாக சென்று பொதுக்கூட்ட மேடைக்கு வந்தனர். காஞ்சி மக்கள் மன்றத்தின் புரட்சிகர கலைநிகழ்ச்சிகள், பாடல்கள், நாடகங்கள் பொதுமக்கள் மற்றும் தோழர்களை வெகுவாக கவர்ந்தது.



மேலும் தொடர் சொற்பொழிவுகளாக இல்லாமல் பேச்சுக்களுக்கு இடையே பாடல்கள், நாடகங்கள் என கலைத்திருவிழா போல் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

இரா. உமாபதி, (திவிக சார்பாக சென்னை மாவட்டச் செயலாளர்), மக்கள் மன்ற ஒருங்கிணைப்பாளர் ஜெசி (வழக்குரைஞர்), பார்வேந்தன்(விசிக வழக்கறிஞர் அணி செயலாளர்), தே.வின்சென்ட்ராஜ் வழக்குரைஞர் (சமூக நீதிக்கான கூட்டமைப்பு) இரா. மங்கையர் செல்வம் (நிறுவனத் தலைவர், தமிழ் மீனவர் விடுதலை வேங்கைகள்) ஆகியோர் சிறப்புரையாற்றினார்.

விழுப்புரம் , கடலூர் மாவட்ட சிவக்குமார், மயிலாடுதுறை மகேஷ், இளையராசா, சென்னை மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ப.அருண், மாணவர் கழக தோழி, உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

புதுவையில் இடதுசாரி இயக்கங்களை ஒருங்கிணைத்து தோழர் தீனா சிறப்பான முறையில் கூட்டத்தை நடத்தினார். மக்கள் மன்றம், திவிக, திமுக, சிபிஐ, மக்கள் அதிகாரம், விசிக, காங்கிரஸ், திராவிடர் தமிழர் கட்சி, சமூக நீதிக்கான கூட்டமைப்பு, விடுதலை வேங்கைகள் உள்ளிட்ட பல அமைப்புகளின் தோழர்கள் 300-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். பேச்சாளர்கள் அனைவருக்கும் நினைவுப் பரிசாக புத்தகங்கள் வழங்கப்பட்டன.

# குற்றவாளிப் பட்டியலிலிருந்து இராம.இளங்கோவன் விடுவிப்பு!

கடந்த 20 ஆண்டுகளாக கழக மாநில வெளியீட்டு செயலாளர் இராம. இளங்கோவன் மீது பொய்யாக சரித்திர குற்றவாளி பதிவேட்டை கோபி காவல் துறையினர் பராமரித்து வருகிறார்கள், அதனால் தான் பெரும் அவதிக்கு ஆளாகியிருப்பதாகவும், தன்னுடைய தனி மனித உரிமை பாதிக்கப்பட்டுள்ளது என்றும், தன் மீது கடுமையான குற்றப் பின்னணி எதுவும் கிடையாது, நான் விடுதலைப் புலிகளை ஆதரித்த காரணத்திற்காகவும், 2009 ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலின் போது காங்கிரஸ் கட்சியை எதிர்த்து "இனி என்ன செய்யப் போகிறோம்" என்ற குறுந்தகடு வெளியிட்டதற்காகவும் என் மீது வழக்கு பதியப்பட்டு சுமார் மூன்றரை மாதங்கள் சிறையில் அடைக்கப்பட்டேன்.

2009-ஆம் ஆண்டு ஈரோடு மாநகரில் உள்ள ஒரு கோயில் மேல் மேம்பாலம் கட்டக்கூடாது என்று இந்து முன்னணியினர் உண்ணாவிரதம் இருப்பதை எதிர்த்து, நானும் கழகத்தினருடன் இணைந்து உண்ணும் விரதம் மேற்கொண்டதற்காக ஈரோடு போலீசாரால் வழக்கு பதியப்பட்டு அதற்காக 15 நாட்கள் சிறையில் அடைக்கப்பட்டேன்.

2006 ஆம் ஆண்டு பார்ப்பனர்களின் மத விரோதப் போக்கினை கண்டித்து ஈரோடு இராகவேந்திரா மண்டபத்தில் பார்ப்பனர்களின் பூணூலை அறுத்ததாக என் மீது வழக்கு தொடரப்பட்டு ஏறத்தாழ ஆறு மாதங்கள் சிறையில் இருந்தேன். மேலும் அதே வழக்கிற்காக தேசிய பாதுகாப்புச் சட்டத்திலும் வழக்கு தொடரப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டேன்.

கோபி காவல் நிலையத்தில் பதிவாகி இருந்த போடப்பட்ட வழக்குகள் அனைத்தும் குற்றப் பின்னணி கொண்ட வழக்குகள் கிடையாது என்றும் அரசியல் மற்றும் மத காழ்ப்புணர்ச்சி காரணமாக தன் மீது தொடங்கப்பட்ட நடவடிக்கையை கைவிட வேண்டும் என்றும் தன் மீது உள்ள குற்றப் பதிவேடு பின்னணியை நீக்க வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்றத்தில் இராம. இளங்கோவன் வழக்கு தொடர்ந்தார்.

இந்த வழக்கில் வழக்கறிஞர் வி.இளங்கோவன் ஆஜராகி வாதிட்டார். சட்டப்படி அவர் மீது சரித்திரப் பதிவேடு தொடர்ந்து இருக்க வேண்டிய அவசியம் இல்லை, என்று நீதிபதி ஜி.கே.இளந்திரையன் கோபி காவல் நிலையத்துக்கு உத்தரவிட்டுள்ளார்.

# மடத்துக்குளம் மோகன் நினைவேந்தல் பரப்புரை




மடத்துக்குளம் இரா. மோகன் அவர்களின் 4-ம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு - தெருமுனைக்கூட்டங்கள்.

மறைந்த மடத்துக்குளம் மோகன் அவர்களின் நினைவேந்தல் நிகழ்வு 01.06.25 ஞாயிறு காலை 9.15 மணி அளவில் மடத்துக்குளம் நான்கு சாலை சந்திப்பில் கழகப் பொருளாளர் திருப்பூர் துரைசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

மோகன் அவர்களின் குடும்பத்தினர் ஜோதி, அறிவுமதி, திலீபன் பெரியார் பிஞ்சு எழில் சித்தார்த்தன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்வில் மடத்துக்குளம் மோகன் அவர்களின் பணிகளை நினைவு கூர்ந்து அறிவியல் மன்றத் தலைவர் சிவகாமி, கழகப் பொருளாளர் துரைசாமி ஆகியோர் நினைவேந்தல் உரையாற்றினார்கள்.

முன்னதாக மடத்துக்குளம் மோகன் இல்லத்தில் அவரின் படத்திற்கு மலர் தூவி மரியாதை செய்து புகழ் வணக்க முழக்கங்ளை கழகத் தோழர்கள் எழுப்பினார்கள். இந்நிகழ்வில் திரளாக அனைத்து தோழர்களும் பங்கேற்றனர்.

நினைவேந்தல் நிகழ்வை தொடர்ந்து இன ஒதுக்கல் பேசும் சங்கராச்சாரியார் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்கிற மயிலாடுதுறை மாநாட்டு தீர்மான விளக்க இரண்டாம் கட்ட தெருமுனை கூட்டங்கள் மடத்துக்குளம் பகுதிகளில் நடைபெற்றது.

தெருமுனை கூட்டங்களுக்கு மடத்துக்குளம் ஒன்றியத் தலைவர் கணக்கன் தலைமை தாங்கினார். மடத்துக்குளம் ஒன்றிய செயலாளர் சிவானந்தம், ஒன்றிய அமைப்பாளர் கடத்தூர் ஐயப்பன், சரவணன் இராசேந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தெருமுனைக் கூட்டங்கள் குமரலிங்கம், கொழுமம்,காரத்தொழுவு,கனியூர் ஆகிய 4 பகுதிகளில் காலை தொடங்கி மாலை வரை நடைபெற்றது.

தெருமுனைக் கூட்டங்களில் கழகப் பொருளாளர் திருப்பூர் துரைசாமி, மாவட்டத் தலைவர் முகில் ராசு, அறிவியல் மன்றத் தலைவர் சிவகாமி, இணையதளப் பொறுப்பாளர் பரிமளராசன், மாநகரத் தலைவர் தனபால், மாநகர அமைப்பாளர் முத்து, ம.தி.மு.க. முகமது சாந்து, சிபிஎம் கிருட்டிணன், விவசாயத் தொழிலாளர் சங்கத் தலைவர் சரவணன், தி.வி.க.கோவை மாநகரத் தலைவர் நிர்மல்குமார் ஆகியோர் பங்கேற்று உரையாற்றினார்கள்.



தெருமுனைக் கூட்டங்களில் தி.வி.க. வடக்கு ஒன்றிய அமைப்பாளர் அய்யப்பன், இனியன், வெங்கட், யாழினி, இரமேசு ஆகியோர் கலந்து கொண்டனர்.

நினைவேந்தல் நிகழ்வில் பொள்ளாச்சி தி.வி.க.ஆனைமலை பொறுப்பாளர் அரிதாசு மற்றும் ஆனந்த், மணி, அப்பாதுரை, நடராசு ஆகியோர் கலந்துகொண்டனர்.

# அய்யா உணவகம் திறப்பு விழா

30-05-2025 அன்று காஞ்சிபுரம் அண்ணா குடியிருப்பு அருகில் திறக்கப்பட்டது. ரவி பாரதி (காஞ்சிபுரம் மாவட்ட பொறுப்பாளர் திவிக) ஒருங்கிணைத்தார்.

மக்கள் மன்ற ஒருங்கிணைப்பாளர் மகேசு திறந்து வைத்து உரையாற்றினார். இரா.உமாபதி( சென்னை மாவட்டச் செயலாளர்), பிரவீன் குமார் (ஒருங்கிணைப்பாளர் மே17 இயக்கம்), தமிழ் சாக்ரடீஸ் (பெரியார் உணர்வாளர்), அ.வெ முரளி காஞ்சிபுரம் மாவட்டத் தலைவர் தி.க), காஞ்சி அமுதன்(தமிழ் உரிமை கூட்டமைப்பு), மு.சங்கர் (50வது மாமன்ற உறுப்பினர் திமுக), ச.மகேஷ் (திமுக), சானகிராமன் (காஞ்சி மாவட்ட மே17 இயக்கம்) ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.



அய்யா உணவக உரிமையாளர் சுரேஷ் நன்றி கூறினார். பெரியார் முழக்க வளர்ச்சி நிதியாக ரூபாய் 2000 வழங்கினார். மேலும் கழக தோழர்கள் சென்னை அருண் (இளைஞரணி), இராவணன் (துணை செயலாளர் தென்சென்னை), கோபி (பகுதி தலைவர் திருவல்லிக்கேணி) மற்றும் காஞ்சிபுரம் தோழர்கள் கலந்து கொண்டனர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted : June 06, 2025

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran